**தலைப்பு – 024 – தேசிய பெறுகை ஆணைக்குழு - 2024**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 024 தேசிய பெறுகை ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய பெறுகை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

தேசிய பெறுகை ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தேசிய பெறுகை ஆணைக்குழுவினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை தேசிய பெறுளை ஆணைக்குழுவினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் தேசிய பெறுகை ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 13 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 07 மூலதன செலவின விடயங்களுக்காக மிகையாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் அச் செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட பின்னர் கூட்டுத்தொகை ரூபா 36,748,074 ஆன தொகை சேமிக்கப்பட்டிருந்தது. இச் சேமிப்பு ஒவ்வொரு செலவின விடயங்களினதும் தேறிய நிதியேற்பாட்டில் 20 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | ஏ.சீ.ஏ 2 (ii) ஊடாக காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் 50 பிரகாரம் சரியாகவும் துல்லியமாகவும் வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 03 செலவின விடயங்களுக்காக குறைவாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமையினால் நி.பி 66 இன் கூட்டுத்தொகை ரூபா 905,000 ஆன மேலதிக | மதிப்பீடுகள் தயாரிக்கும் போது நிறுவனத்திலுள்ள உத்தியோகத்தர்களை பார்க்கிலும் அதிகமானோர் ஆண்டினுள் நிறுவனத்திற்கு வருகை தந்தமையினால் இந்த | நிதி பிரமாணம் 50 பிரகாரம் சரியாகவும் துல்லியமாகவும் வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அம் மேலதிக நிதியேற்பாடு ஒவ்வொரு செலவின விடயங்களின் ஆரம்ப மதிப்பீட்டு நிதியேற்பாட்டின் 18 சதவீதம் தொடக்கம் 39 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | செலவினம் ஆண்டினுள் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டினை பார்க்கிலும் அதிகரித்துள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (இ) | 03 செலவின விடயங்களுக்காக மிகையாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமையினால் அச் செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 3,412,500 ஆன நிதியேற்பாடு, நி.பி 66 இன் கீழ் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றுகை செய்யப்பட்டிருந்தது. அம் மாற்றுகைகள் ஒவ்வொரு செலவின விடயங்களின் ஆரம்ப மதிப்பீட்டு நிதியேற்பாட்டில் 50 சதவீதம் தொடக்கம் 67 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | அரச செலவின முகாமைத்துவ கொள்கை ஊடாக உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து செலவினம் மட்டுப்படுத்தப்பட்டமையினாலும் கட்டிடங்கள் வாடகை சேமிக்கப்பட்டமையினாலும் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் 50 பிரகாரம் சரியாகவும் துல்லியமாகவும் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | வரவு செலவு திட்டம் ஊடாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிராத 02 செலவின விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 2,500,000 ஆன நிதியேற்பாடு நி.பி. 66 இன் கீழ் ஒதுக்கப்பட்டிருந்தது. | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் ஆலோசனை பிரகாரம் ஒதுக்கப்பட்டிந்த நிதியேற்பாடானது தொடர்புடைய செலவின விடயங்களுக்கு மாற்றுகை செய்யப்பட்டு அதை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிதி பிரமாணம் 50 பிரகாரம் சரியாகவும் துல்லியமாகவும் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| திறைச்சேரி கணக்கு அறிக்கை (SA 52) பிரகாரம் முற்பண கணக்கு மீதி ரூபா 1,981,352 ஆக காணப்பட்ட போதிலும் அது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 246,230 ஆக குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தமையினால் மொத்த சொத்துக்களின் பெறுமதி மற்றும் திறைச்சேரிக்கு தேறிய சொத்துக்கள் பெறுமதி அம் பெறுமதியினால் குறைந்திருந்தது. | 21 ஆம் இலக்க தலைப்பினால் ரூபா 246,230 ஆன இத் தொகை வரவு வைக்கப்பட்ட பின்னர் அந் நிறுவனத்தினாலேயே அத் தொகை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் SA51 ஆன திறைச்சேரி மாதிரியில் இந்த தகவல்கள் காண்பிக்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. | முற்பண கணக்கு மீதி நிதி நிலைமைக் கூற்றில் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய கூட்டுத்தொகை ரூபா 470,268 தொகையான பொறுப்புக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | இந்த பெறுமதி 2024 ஆம் ஆண்டுக்குரிய கணக்கு அறிக்கைகள் தயாரித்து சமர்ப்பிக்கும் வரையிலும் பெறப்படாத உறுதிச்சீட்டுக்களின் பெறுமதியாவதுடன் அவை பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்குள் உள்ளடக்கப்படுவதற்கு முடியவில்லையென குறிப்பிடப்பட்டுள்ளது. | ஆண்டுக்குரிய அனைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் அடையாள்படுத்தப்பட்டு நிதிக் கூற்றினுள் உள்ளடக்கப்படல் வேண்டும். |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | | |
| (அ) | 2025 பெப்ரவரி 18 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிக்காட்டி | - | 2024 நிதிக் கூற்றுக்கள் தொகுப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ள நிதி நிலைமைக் கூற்றில் (ACA –P) குறிப்புக்கள் மற்றும் அறிக்கையிடல் அடிப்படையின் கீழ் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் நோக்கம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அவ் 06/2024 ஆம் இலக்க திருத்தப்பட்ட அரச கணக்குகள் வழிக்காட்டி வெளியிடப்படும் போது இந்த கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அது கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் திருத்தப்பட தேவைப்பாடாது என தெரிவிக்கப்பட்டிருந்தமையினால் திருத்தப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் கணக்குகள் தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2017 யூன் 26 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தி | 281,511 | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் கைதவிர்ப்புக்கள் தொடர்பான தகவல்கள் கொம்ப்டோலர் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | பதவியணி பற்றாக்குறை காரணமாக இந்த தகவல்கள் அறிக்கையிடப்படுவதற்கு முடியாது போனது எனவும் எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் முன்வரும் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் நடப்பு ஆண்டின் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிற்கு தொடர்புடையதாக செயற்பாடுகள் (Activity) மட்டும் உள்ளடக்கப்பட்டு திகதியொன்று இன்றி செயல்நடவடிக்கைத் திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் தாமத தவறினால் அங்கீகரிக்கப்பட்ட திகதி குறித்துக் கொள்ளப்படுவதற்கு முடியவில்லை என்பதுடன் வரும் ஆண்டில் சரியாக சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு தொடர்புடைய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு குறித்த திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமரப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் குறிப்பிடப்பட்டுள்ள 12(அ), (ஆ), (இ), (உ) மற்றும் (ஊ) வழிக்காட்டிகள் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் | நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பான தகவல்கள் தாமத தவறினால் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு | சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளடக்கப்படுவதற்கு இயலாத போதிலும் எதிர்காலத்தில் அத் தகவல்களுடன் சமர்ப்பிக்கப்படுமெனக் குறிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் 2024 ஆம் ஆண்டிற்குரிய நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக திட்டமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பொறுப்புக்கள் துறைகளுக்குரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படும் காலவரையறை (Time frame) தெளிவாக சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியாகையில் அத் துறைகளின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு காணப்பட்டது. | பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதற்கு தொடர்புடைய மிகவும் துல்லியமான காலவரையறை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| | (i) பொருட்கள், பணிகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளுக்கான பெறுகை வழிக்காட்டி கோவை – 2024 சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி என 03 மொழிகளிலும் 2024 நவம்பர் 25 ஆந் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அது 2025 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டு, அதற்கான கைப்புத்தகங்கள் ஆங்கில மொழியில் மட்டும் ஆக பிரசுரிக்கப்பட்டிருந்தது. | பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்ட வண்ணம் பணிகள் நிறைவு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஆலோசனை சேவை பெறுகைக்கான வழிக்காட்டி கோவை வரைவு செய்யப்பட்டு, அதற்குரிய கைப் புத்தகத்துடன் 2025 ஆம் ஆண்டினுள் வெளியிடப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. | பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்ட வண்ணம் பணிகள் நிறைவு செய்யப்படல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (ஆ) | அரசாங்க வாகனங்கள் பராமரித்தல் தொடர்பாக 2016 திசெம்பர் 29 ஆந் திகதி 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிற்கு சொந்தமான 04 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிராததுடன் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் வாகனங்கள் தொடர்பான குறிப்பொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவிற்கு சொந்தமாக போதுமான பதவியணி காணப்படாமையினால் எரிப்பொருள் பரிசோதணை மேற்கொள்ளப்பட்டிராததுடன் வருங்காலத்தில் மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்படதென குறிப்பிடப்பட்டுள்ளது. | பொது நிர்வாகச் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதி பிரமாணம் 1645(அ) பிரகாரம் 04 வாகனங்களின் லொங் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | லொங் புத்தக குறிப்புக்கள் அதன் பிரகாரம் பேணிச் செல்லப்படுகின்றதென குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் 1645(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பிரகாரம் அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் லொங் புத்தகங்கள் நாளதுவரையாகப்பட்டு பேணிச் செல்பலப்படல் வேண்டும். |
| (இ) | நி.பி 1647(ஆ) பிரகாரம் வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பான முழுமையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டினுள் அவ்வாறான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன், எதிர்காலத்தில் வாகனங்கள் ஆய்வொன்று மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது. | நி.பி 1647(ஆ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சொத்துக்கள் பதிவேடு நாளதுரையாக்கப்படல் | | |
| (i) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருட் பதிவேடு மற்றும் CIGAS முறைமையின் நிலையான சொத்துக்களின் கீழான BOS Report ஒவ்வொன்றும் இணக்கம் செய்யும் போது 48 சொத்து உறுப்படிகளுக்கு தொடர்புடைய 197 சொத்துக்களில் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இருப்பு பொருட்களின் பொருட்பதிவேடுகளின் பக்க இலக்கங்கள் மற்றும் தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ள வண்ணம் சொத்துக்களின் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் CIGAS கணினி முறைமைக்கு தரவுகள் உள்ளடக்கப்படுவதற்கு இந்த முறையின் கீழ் தொடர்புடைய குறியீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. | இருப்பு புத்தகங்கள் மற்றும் CIGAS கணினி முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் திருத்தப்பட்டு நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | CIGAS கணினி முறைமையில் உருவாகின்ற சொத்துக்களின் குறியீடுகள் பௌதீக சொத்துக்களில் பயன்படுத்தப்பட்டிராமையினால் சொத்துக்கள் அடையாளப்படுத்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் சொத்துக்கள் முறையாக கைதவிர்ப்புச் செய்வதற்கு மற்றும் இருப்புக்களின் ஒப்பாய்வின் போது துல்லியம் உறுதி செய்துக் கொள்வதற்கும் தடையாகவுள்ளதென அவதானிக்கப்படுகின்றது. | மட்டுப்படுத்தப்பட்ட இடவசதி, குறைவான பதவியணியின் கீழ் இந்த பணிகள் நிறைவேற்றப்படும் போது தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் வருங்காலத்தில் புதிய கட்டிடத்தின் அலுவலகம் முறையாக தாபிக்கப்பட்டதன் பின்னர் குறியிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. | CIGAS கணினி முறைமையில் உருவாகின்ற சொத்துக்களின் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டு சொத்துக்கள் குறியிடப்படல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த ஊழியர் வெற்றிடங்கள் 30 ஆவதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 60 சதவீதமாக காணப்படுகின்றது. இந்த வெற்றிடங்களில் சிரேஷ்ட நிலையில் 10 வெற்றிடங்களும், மூன்றாம் நிலையில் 02 வெற்றிடங்களும், இரண்டாம் | நிறுவனத்தின் இடவசதி போதாமையின் காரணத்தினால் பதவியணி இணைக்கப்படாத துடன் புதிய கட்டிடம் நிமாணிக்கப்பட்ட பின்னர் இந்த நிலைமை தீர்க்கப்படக் கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | விரைவாக வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | நிலையில் 10 வெற்றிடங்களும் முதலாம் நிலையில் 08 வெற்றிடங்களுமாக காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்த ஊழியர் எண்ணிக்கை 03 ஆக காணப்பட்டது. | | வேண்டும். |
| (ஆ) | அனைத்து அரசாங்க நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகள் தொடர்பான நடைமுறைகள் மற்றும் தரநிலைகள் தயாரித்தல் மற்றும் அரசாங்க நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகள் தொடர்பான ஒழுங்குபடுத்துதல் மற்றும் அது தொடர்பாக பொருத்தமான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதல் பெறுகை ஆணைக்குழுவின் பணியொன்றாக அடையாளப்படுத்தப்பட்டு அப் பணியினை நிறைவேற்றுவதற்கு பிரதானமாக 03 பெறுகை நிபுணர்கள் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்வதற்காக ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட நிலையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், 2024 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் இந்த நிபுணர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | தேவைக்கேற்றவாறு பெறுகை நிபுணர்களின் சேவை முறையாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பெறுகை நிபுணர்களின் அறிவாற்றலை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |